**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII code of Criminal Procedure)
**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, GANDARVAKOTTAI**
**CC.NO-1/2024**

**List of Witness LW6 Examined as PW5**

| | | | |
|---|---|---|---|
| Name | செல்வகணேஷ் | Age: | 43 |
| Father's name | முருகேசன் | Calling: | வருவாய் ஆய்வாளர், |
| Village | நவல்பட்டு | Taluk | திருவெறும்பூர் |

Solemly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 30.09.2025
(எதிரிகள் ஆஜர். )

முதல் விசாரணை

1. நான் தற்போது திருச்சி மாவட்டம்,திருவெறும்பூர் தாலுகா நவல்பட்டு கிராமத்தில் வருவாய் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 11.05.2019 ஆம் தேதியன்று, நான் திருவெறும்பூர் தாலுகா, கிருஷ்ணசமுத்திரம் கிராத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணியில் இருந்தேன். அன்றைய தினம் காலை சுமார் 05.00 மணியளவில், திருவெறும்பூர் காவல்நிலைய ஆய்வாளர், எனக்கு போன் செய்து, கீழ குமரேசபுரம், இரயில்வே கேட் அருகில், வாகன சோதனையின் போது, சந்தேகத்திற்கிடமாக வந்த காரில் வந்த நபர்களை , பிடித்து வைத்திருப்பதாக கூறி, அங்கு வரச்சொன்னார்கள், நான் அங்கு சென்றேன். நான் சென்ற போது, அங்கு TN 18 J 1029 என்ற பதிவெண் கொண்ட சிவப்பு நிற டபேரா கார் அங்கு நின்று கொண்டிருந்தது. காவல் ஆய்வாளர் அங்கு 3 நபர்களை விசாரித்துக்கொண்டிருந்தார்கள். அந்த நபர்களின் பெயர் செல்வகார்த்திக், ஆனந்தன், தமிழ்செல்வன் என்று சொன்னார்கள். அந்த நபர்களை பார்த்தால் என்னால் அடையாளம் காட்டமுடியுமா என்றால் முடியும். அதில் இரண்டு நபர்கள் தற்போது நீதிமன்றத்தில் ஆஜரில் உள்ளார்கள், அவர்கள் பெயர் செல்வக்கார்த்திக், ஆனந்தன். ( எதிரி தமிழ்செல்வன் நீதிமன்றத்தில் ஆஜரில் இல்லை என்பதால் சாட்சி அவரை அடையாளம் காட்ட இயலவில்லை. அவர் ஆஜரில் இருந்திருந்தால் அடையாளம் காட்டியிருப்பார்) அப்போது, செல்வக்கார்த்திக் போலிசாரிடம் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தினை போலிசார் எழுதிக்கொண்டார்கள். அதில் செல்வக்கார்த்திக் திருவையாறை சேர்ந்தவர் என்றும் சம்பவங்களை பற்றி சொன்னார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் நான் சாட்சி கையொப்பம் செய்தேன். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். **(மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** அந்த இடத்தில், போலிசார் ரூ.500/- பணம், 3 கத்திகள், மேற்படி காரினை கைப்பற்றினார்கள்.

2) மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தில், செல்வக்கார்த்திக் பொருள்களை காண்பிப்பதாக சொன்னதன் பேரில், திருவெறும்பூரில் உள்ள LIC பில்டிங் அருகில் உள்ள VV கார் ஒர்க் ஷாப்பில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த குவாலிஷ் காரில் இருந்து, வெள்ளியிலான நான்கு கழுத்து செயின், 2 மோதிரம், 12 கைசெயின், 6 செல்போன்கள் ஆகிவற்றை செல்வக்கார்த்திக் எடுத்து ஆஜர் செய்து, போலிசார் கைப்பற்றினார்கள். அதில் என்னிடம் சாட்சி கையொப்பம் பெற்றுக் கொண்டார்கள். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் வெள்ளிப்பொருட்களை கைப்பற்றியதற்கான கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். **(மேற்படி** கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** மேற்படி போலிசாரால் கைப்பற்றப்பட்ட வெள்ளிப்பொருட்களை பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட முடியுமா என்றால் முடியும். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் அ.சா.பொ.1 புகைப்படத்தில் உள்ள வெள்ளிப்பொருட்கள் தான் போலிசார் கைப்பற்றியதாகும். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1) போலிசார் என்னை அழைத்துச் சென்றதாக சொல்லும், திருவெறும்பூரில் உள்ள LIC பில்டிங் அருகில் உள்ள VV கார் ஒர்க் ஷாப், நான் அப்போது பணிபுரிந்த கிராம நிர்வாக அலுவலக ஆள்வரை இல்லை என்றால் சரிதான். நான் கிராம நிர்வாக அலுவலராக விசாரணைக்கு ஒத்துழைப்பு செய்ய வேண்டும் என்றால், உரிய அழைப்பாணையின் பெயரிலோ அல்லது வட்டாட்சியர் நிலைக்கு குறையாத அதிகாரியின் உத்தரவின் பெயரிலோ செய்ய வேண்டும் என்பது எனக்கு தெரியும் என்றால் சரிதான். அந்த நடைமுறை இந்த வழக்கில் பின்பற்றப்படவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கு மற்றும் எதிரிகள் பற்றிய விபரம் குறித்து போலிசார் சொன்னதன் அடிப்படையில் எனக்கு தெரியும் என்றால் சரிதான்,( சாட்சி தற்போது தாமாக, எதிரி வாக்குமூலம் அளித்த போது நான் அந்த இடத்தில் இருந்ததன் அடிப்படையில் தெரியும் என்று கூறுகிறார்.)

2) போலிசார் அழைத்ததன் பேரில் நான் சென்றதாக சொல்லும் இடம் மற்றும் கார் நிறுத்தப்பட்டிருந்ததாக சொல்லும் இடம் திறந்தவெளி என்றால் முதல் இடம் திறந்தவெளி ஆகும், இரண்டாம் இடம் தனிப்பட்ட நபரின் இடம் ஆகும், அங்கு கேட் போடப்பட்டிருந்தது. நான் சொல்லியுள்ள வெள்ளிப்பொருட்களின் வகையங்கள் மற்றும் எடைகள் எனக்கு தெரியாது என்றால் ஆமாம். புகைப்படத்தில் பார்த்ததால் தான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். இந்த வழக்கு சம்மந்தமாக என்னை விசாரித்தது, திருவெறும்பூர் போலிசார் தான் என்றால் சரிதான். இந்த வழக்கு தொடர்பாக திருவெறும்பூர் போலிசார் ஒருமுறை விசாரித்த பிறகு எந்த தருணத்திலும் எந்த போலிசாரும் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். என்னை போலிசார் விசாரித்ததாக சொல்லப்படும் இடம் திருவெறும்பூர் காவல் நிலையம் என்றால் நான் காவல் நிலையம் செல்லவில்லை, போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

3) எனக்கு எழுதியிருப்பதற்கும் தட்டச்சு செய்துள்ளதற்கும் வித்தியாசம் தெரியும் என்றால் சரிதான். என்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்பட்ட ஆவணங்கள் தட்டச்சு செய்யப்பட்ட ஆவணங்கள் என்றால் சரிதான். போலிசார் தட்டச்சு செய்து கொடுத்த ஆவணங்களில் நான் கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த ஆவணங்கள் தான் நீதிமன்றத்தில் என் மூலமாக குறியீடு செய்யப்பட்டது என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகள் சம்மந்தமாக வேறு நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க சென்றுள்ளேனா என்றால் இல்லை. நான் போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க இவ்வழக்கில் சாட்சியாக சேர்க்கப்பட்டேன் என்றால் சரிதான். அதனால், நான் போலிசாருக்கு அனுசரணையாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

4) எதிரியை தொடர்புபடுத்தி,முதல் விசாரணையில் சாட்சியம் அளித்திருக்கிறேன் என்றாலும் எதிரி ஒப்புதல் வாக்குமூலம் அளித்தததாகவும் வழக்கு சொத்துக்கள் கைப்பற்றப்பட்டதாகவும் போலிசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க அதற்கு அனுசரணையாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளவாறு எதிரி ஒப்புதல் வாக்குமூலம் அளிக்கவில்லை என்றாலும் அவரிடம் இருந்து வழக்கு சொத்து எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றாலும் சரியல்ல. நான் பொதுவாக எனது ஆள்வரைக்குட்பட்ட பகுதியில் தான் வசிக்க வேண்டும் என்றாலும் அதற்கு வெளியில் விசாரணைக்காக செல்ல வேண்டும் என்றால் வட்டாட்சியரின் அனுமதி பெற வேண்டும் என்றாலும் சரிதான். அந்த நடைமுறை இந்த வழக்கில் பின்பற்றப்படவில்லை என்றால் நான் எனது ஆள்வரைக்குள் தான் குடியிருந்தேன். அதற்கு வெளியில் விசாரணைக்கு செல்வதற்கு வட்டாட்சியர் அனுமதி பெற வேண்டும். எழுத்து மூலமாக வட்டாட்சியர் அனுமதி பெறவில்லை, வாய்மொழியான உத்தரவின் பெயரில் தான் சென்றேன்.

**சாட்சியின் கையொப்பம்**

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல, தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு, என் கையெழுத்து செய்யப்படுகிறது.**

**ஒப்பம்.என்.சிவபழனி,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கந்தர்வகோட்டை.**